முருகப்பெருமான் துணை

**மகான் பிரும்மமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.08.2023**, வெள்ளிக்கிழமை

1. ஆறுமுகப் பெருமான் அவதார
அண்ணலே ஞான வள்ளலே
மாறுதலை உலகினில் செய்ய
மாதவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது நள்ளி திங்கள்
வரங்களென மூவாறோர் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 19 ம் நாள், 04.08.2023, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை பிரும்ம முனிவர் யானும்
அரங்கன் பலம் உலகறிய உரைப்பேன்
வாசி நடத்தி நல் வழிகாட்டி
வடிவேலனே உன்னுடன் இருக்க
4. இருக்கவே உயர்வான படைகளை
இணைத்து ஆறுமுகப் பெருமான்
கருத்தாக வழிநடத்தி வர
கட்டமைப்பை உரைத்தும் கூட
5. உரைத்தும் கூட ஞானவான்களே
உலகத்தில் ஏன் இன்னும் வேடிக்கை
திரையை நீக்கி வருவது போல்
தேசிகனார் தடைகளை நீக்கி
6. நீக்கியே தொண்டர் படைகளை
நீதிவழி ஆன்மீக அரசியல் களம்
தேக்கமற வரும் காலங்களில்
தொடர்பு கூட்டி களம் காண வேணும்

7. வேணுமே சடுதி சபைகூட்டி
வினவிட நல் முடிவுகளை
ஞானமாக தேசிகனும் எடுத்து
நம்பிக்கையூட்டி தொண்டர் பெருமக்களை

8. பெருமக்களை கலிக் கொடுமை
பெருஞ்சேதம் தராவண்ணம்
வருமுலகில் ஆட்சி மாற்றமும்
வளர்ச்சியானச் சூழலும் தேசம் காண

9. காணவே களம் காணும்
கண்டும் காணா அலட்சியம்
ஞானமிலா கொண்டுவிட்டால்
ஞானதேசிகன் அவதாரம் தானும்

10. தானும் அரங்கேறா மேவி
தரணியோ அழிவுதனை அளவிலா
வானவர்களே அஞ்சக் கண்டு
வையகம் நசிவு காண நேரும்

11. நேருமைபட உண்மை களம்
நெருங்கிவர காலம் கடத்தா
பெருமைபட களமிறங்கி செயல்பட
பேருலகில் ஞானஆட்சி மலரும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–